**சுருக்கம்**

மாநில அரசுத் தணிக்கைத் துறை - மாநில அரசுத் தணிக்கைத் துறை தலைமை அலுவலகத்தில் தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அமைப்புப் பிரிவை (CELL FOR DATA MANAGEMENT AND ANALYTICS) உருவாக்குதல் - நிதி ஒப்பளிப்பு - ஆணை - வெளியிடப்படுகிறது.

**நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை**

அரசாணை (நிலை) எண்.49

நாள்: 05.03.2020
விகாரி, மாசி - 22
திருவள்ளுவர் ஆண்டு - 2051

**படிக்கப்பட்டது:**

மாநில அரசுத் தணிக்கை இயக்குநரின் கடித ந.க.எண்.01206/ஒந.2/2018, நாள் 12.02.2020.

*****

**ஆணை:**

மாநில அரசுத் தணிக்கை இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தமிழ்நாடு புதுமை முயற்சிகளின் (Tamil Nadu Innovation Initiatives - TANNI) கீழ் மாநில அரசுத் தணிக்கைத் துறை தலைமை அலுவலகத்தில் தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அமைப்புப் பிரிவை (CELL FOR DATA MANAGEMENT AND ANALYTICS) உருவாக்க அனுமதியளிக்குமாறும், மேற்சொன்ன அமைப்பிற்கு மென்பொருள் உருவாக்கிட ரூ.8,97,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மென்பொருள் உருவாக்கிட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இத்தொகையை தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு (TNeGA) வழங்கிடவும் ஆணை வெளியிடுமாறு கோரியுள்ளார்.

2. மாநில அரசு தணிக்கை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு புதுமை முயற்சிகளின் (Tamil Nadu Innovation Initiatives - TANNI) கீழ் மாநில அரசுத் தணிக்கைத் துறை தலைமை அலுவலகத்தில் தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அமைப்புப் பிரிவை (CELL FOR DATA MANAGEMENT AND ANALYTICS) உருவாக்கிட அனுமதியளித்தும், இவ்வமைப்பிற்கு மென்பொருள் உருவாக்கிட ரூ.8,97,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து

//த.பி.பா//

Scanned with CamScanner

தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், மென்பொருள் உருவாக்கும் பணிக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இத்தொகையை தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு (TNeGA) வழங்கிடவும் மாநில அரசுத் தணிக்கை இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள இச்செலவினம் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டும்.

"2054-00 கருவூலம், கணக்குகள் நிருவாகம் - 098 உள்ளாட்சி நிதித் தணிக்கை - மாநிலச் செலவினங்கள் - AH மாநில புதுமை நிதித் திட்டத்தின் கீழ் தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அலகு அமைப்பது - 376 கணினியும் துணைப் பாகங்களும் - 01 வாங்குதல்".
(த.தொ.கு.2054 00 098 AH 37601)

4. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை 2019-2020-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ள மாநில அரசுத் தணிக்கை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா.ஆனந்தகுமார்**
**அரசு சிறப்புச் செயலாளர்**

**பெறுநர்**
மாநில அரசுத்தணிக்கை இயக்குநர், நந்தனம், சென்னை-35.
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (SP-1) துறை, சென்னை-9.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

**நகல்**
நிதி (பொது / அ.ந.மு. பல்வகை)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

06/03/2020
பிரிவு அலுவலர்.
5-3-2020

Scanned with CamScanner